செ.வெ.எண்.22 நாள்.07.04.2017.

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றங்கரை பகுதியில் உள்ள செங்கல் காளவாசல் உள்ளிட்ட பல்வேறு ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றிட மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் 05.04.2017 அன்று மாதாந்திர சட்டம் ஒழுங்கு பராமரிப்புக் குழு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடன் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது–

மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றங்கரைபகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிட உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, பொதுப்பணித்துறை, வருவாய்த் துறை, காவல் துறை ஆகிய துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றங்கரையோர பகுதியில் உள்ள செங்கல் காளவாசல் மற்றும் ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஆக்கிரமிப்புகள் அகற்றுவதில் எவ்வித பாரபட்சமும் இல்லாமல் இப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு, கோட்டாட்சியர், காவல் துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

திருநெல்வேலி மாநகரப் பகுதி, கருப்பந்துறையில் உள்ள செங்கல் காளவாசல் உள்ளிட்ட ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளது. மேலும், ஆக்கிரமிப்புகளை தொடர்ந்து விரைவாக அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாநகராட்சி, பொதுப்பணித் துறை அலுவலர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள் உள்பட அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.